9

எரிமலை

-அகிலன்

அந்த வீட்டின் வெளிப்புறத்து அறையில் பஞ்சு காத்திருந்தார். அவரைப் புன்முறுவலோடு வரவேற்றுச் சோபாவில் இருக்கச் செய்த ஜிப்பா போட்ட பிரமுகர் உள்ளே புவனேசுவரியிடம் தகவல் சொல்லப் போயிருக்க வேண்டும். அறைக்கு வெளியே சன்னல் வழியாகத் தெரிந்த தோட்டத்துக் காட்சி அழகு மயக்கம் தந்தது. பல வண்ணச் செடி கொடிகள்; மலர்கள்; மாலை நேரத்து மஞ்சள் வெயில்; சுகமான காற்று.

இவ்வளவிலும் ஏனோ பஞ்சுவுக்குச் சட்டைக்குள்ளே வேர்த்துக் கொட்டியது. மேலே சுழன்ற மின் விசிறியால் கூட அவர் புழுக்கத்தைக் குறைக்க முடியவில்லை. புழுக்கம் வெளியில் இருந்தால்தானே? உள்ளுக்குள், அவர் மனத்துக்குள், அதன் ஆழத்துக்குள் இருந்தது.

தவிப்பு, பரப்பு, ஆவல், அச்சம், ஆனந்தம், உறுத்தல் இவ்வளவும் சேர்ந்து அவரை என்னவோ செய்தன. புவனேசுவரியைப் போன்ற ஒரு மாதிரியானவள் வீட்டுக்கு-பெரிய மனிதர்களின் சிறிய தனங்களால் வாழ்ந்தவள் வீட்டுக்கு-அவர் இப்போதுதான் முதல் முறையாக வந்திருக்கிறார். பிரபலமான ஒரு 'கலை-இலக்கிய-அரசியல்' பத்திரிகையின் பிரபலமான ஆசிரியர் அவர்.

புவனேசுவரியின் வீட்டுக்கு அவர் வந்தது தெரிந்தால் நாலு பேர் நாலு விதமாகப் பேசுவதற்கு இடமாகும். முன்னேற்பாட்டுடன் சில வீடுகளுக்கு முன்பே தம் காரிலிருந்து இறங்கிக் கொண்டு அதைத் திருப்பி அனுப்பிவிட்டார். திரும்பும்போது வாடகைக் காரில் போனால் போகிறது. புவனேசுவரி தன் காரில் அனுப்புவதாகக் கூறினாலும் அதை மறுத்து விட வேண்டும். பிரபலமாகித் தொலைப்பதில் இதுதான் வம்பு; கெட்ட நடத்தையுள்ளவள் என்று பட்டம் கட்டிக் கொண்ட ஒருத்தியின் வீட்டுக்குப் பகிரங்கமாகப் போய்வர முடியாது.

முகத்தைத் தம் கதர்க் கைக்குட்டையால் அழுத்தித் துடைத்துக் கொண்டார். அந்த வரவேற்பறையைக் கண்ணோட்டம் விட்டார். பட்டணத்துப் பெரிய பெரிய மனிதர்கள் வீட்டு முகப்பறை எப்படியெல்லாம் கலையழகு என்ற பெயரில் மேல் நாட்டு முறை ஆடம்பர உதட்டுச் சாயம் பூசிக் கொண்டிருக்குமோ அப்படி அது இருந்தது.

உலகப்பேரோவியர் ஒருவரின் படங்கள், பல நாட்டு பொம்மைகள், கைவினைச் சாமான்கள், பஞ்சடைத்த மிருகங்கள், பறவைகளின் கூடுகள் முதலியன. ‘மியூஸிய’த்தின் ஒரு பகுதி உங்கள் வரவேற்பறையில் இருக்குமானால், நீங்கள் மதிக்கப்பட வேண்டிய கட்டத்துக்குத் தாவிக் கொண்டிருக்கிறீர்கள் என்று பொருள்.

அந்த அறை, புவனேசுவரியைப் பற்றி அவர் கேள்விப்பட்டதை உறுதிப்படுத்தியது. ஆரம்ப காலத்தில் அவள் ஐந்துக்கும் பத்துக்கும் என்னவெல்லாம் செய்தாளோ தெரியாது. ஆனால் இப்போது அவள் ஓர் ஆண்பிள்ளையிடம் குறைந்தபட்சம் ஒரு மணி நேரத்துக்கு ஐயாயிரம் முதல் பத்தாயிரம்வரை வாங்குகிறாளாம். பஞ்சுவுக்கு இதை முதலில் நம்புவது கஷ்டமாகத்தான் இருந்தது. பிறகு விசாரித்து அது உண்மை என்பதைத் தெளிவுபடுத்திக் கொண்டார். கள்ளப் பணத்தினால் ஒன்றுக்குப் பத்தைக் கொடுத்து எதையும் வாங்கக் கூடியவர்களே இவளுடைய வாடிக்கைக்காரர்களாம்.

‘மணிக்கு ஐயாயிரமென்றால் ஒரு நாள் எட்டு மணி நேர உழைப்பிற்கு நாற்பதாயிரம். மாதத்துக்கு இருபத்தைந்து நாள் உழைப்பென்றாலும் பத்து லட்சம்!’ கணக்குப் பார்த்த பஞ்சுவுக்குத் தலை சுற்றியது. ‘ஆம், இந்த லட்சத்துக்கும் கோடிக்கும் வருமான வரி உண்டோ? இருக்காது! ஆயிரக்கணக்கில் சம்பாதிப்பவர்கள் தாம் ஒரே கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும். லட்சக் கணக்கில் என்றால் ஒன்பது வகைக் கணக்கெழுத உரிமையுண்டு!’-‘பஞ்சசாமிர்தம்’ பத்திரிகையில் பஞ்சுவுக்கு மாதம் ஆயிரம்ரூபாய் சம்பளம். நம் அரசியல் சாசனத்தில் குடிமகனுக்குப் பொய்க்கணக்கெழுதவும் கள்ளப்பணத்தில் சொத்துக்கள் வாங்கவும் ஜீவாதார உரிமை வழங்கப்பட்டிருக்கிறதா என்பதை ஆராய நினைத்தார்.

சம்பங்கிப்பூ மணம் கமழ, ‘‘மன்னிக்கவேண்டும்’’ என்ற குரல் கேட்டுத் தலையைத் திருப்பினார் பஞ்சு.

‘‘கால் மணி நேரத்துக்கு மேல் உங்களைக் காக்க வைத்து விட்டேன்’’ என்று சொல்லிக் கொண்டே ஒயிலாகக் கதவில் சாய்ந்து நின்றாள் புவனேசுவரி.

இவள்தான் புவனேசுவரியா! பஞ்சுவின் நடையில் சொல்லப்போனால், ‘சாட்சாத் ஈசுவரி தேவியே தான்; லட்சுமி கடாட்சம் தாண்டவமாடும் முகமண்டலத்துக்குச் சொந்தக்காரிதான். முப்பத்தைந்து வயதை அவள் தாண்டியிருந்தாலும் இருபத்தைந்துகூட மதிப்பிட முடியாது. ஒடித்து மடியில் கட்டிக் கொள்ளலாம் போன்ற ஒல்லி; புன்னகை பூக்கும் விழிகளின் குளுமையான பார்வை; எடுப்பான மூக்கு; அடர்ந்த புருவங்கள்; நேர்வகிடு எடுத்துச் சீவிய நெளி நெளியான கேசம்; காதுகளில் வைரத்தோடுகளோடும் கழுத்தில் வைரச் சங்கிலியோடும் பூவும் பொட்டுமாகக் குடும்பப் பெண்களைத் தோற்க அடிப்பவள்போல் நின்றாள். ரோஜாப் பூவின் நிறம்.

உதட்டுச் சாயம் ஏதும் இல்லாமலே, வெற்றிலைச் சாறுபடியாமலே, செம்பருத்தி மலராகப் பூத்திருந்தன அவள் இதழ்கள்.

பத்திரிகா தர்மத்தின் புனிதத்தை நிலைநாட்ட வேண்டிப் பஞ்சுவும் 'பஞ்சாமிர்த'த்துக்காகச் சில திரை நட்சத்திரங்களோடு பழகியிருக்கிறார். காலையிலும், மாலையிலும் வெளிவரும் தினசரிகள் நட்சத்திரங்களின் படங்களைப் போட்டு அந்தத் தர்மத்தை வளர்க்கும்போது சினிமாவுக்கென்றே உள்ள வழவழாத் தாள் பத்திரிகைகள் அவர்களை அறுபத்து நான்கு கோணங்களிலும் ஆறேமு வண்ணங்களிலும் காட்டி அந்தத் தர்மத்துக்குச் சாயம் பூசும்போது. தாமும் தம்முடைய பங்குத் தர்மத்தைப் புறக்கணித்து விடக்கூடாதே என்பதற்காக அவர்களைப் பற்றிய சுவையான செய்திகளைத் தம் பத்திரிகையில் வெளியிடுவார்-ஆனால், புவனேசுவரிக்கு முன்னால் அவர்கள் எம்மாத்திரம்?

பஞ்சுவை அழைத்துக் கொண்டு புவனேசுவரி முன்னால் நடந்தாள். மந்திரத்தால் கட்டுண்டவர் போல் அவளைத் தொடர்ந்து உட்கூடத்திலிருந்த படிகளின் வழியே மாடிக்கு ஏறினார் பஞ்சு. எதேச்சையாக அவர் பார்வை சன்னல் வழியே படிகளை ஒட்டியிருந்த அறைக்குள் சென்றது. ஒரு கணம் நின்று கவனித்தார். அறை முழுவதும் கண்ணாடி அலமாரிகளில் புத்தகங்கள்; கட்டுக் கட்டாகப் பத்திரிகைகள். அடுத்தாற்போல் சுவரில் அவர் கண்ட காட்சியைத் தான் அவரால் ரசிக்க முடியவில்லை; அங்கே அரை நிர்வாணப் பக்கிரியான காந்தியின் படம் மாட்டியிருந்தது.

'இந்தக் கேடுகெட்டவள் வீட்டில் காந்தி படம் எதற்கு?' என்று தமக்குள் ஆத்திரப்பட்டுக் கொண்டார் பஞ்சு. அவர் காந்தியைப் பற்றிப் பேசியவர்; எழுதியவர்; இன்னும் எழுதி வருபவர். கட்டுவது கூடத் தும்பைப்பூ நிறக் கதராடைதான். 'இவள் இரட்டை வேடம் போடுகிறவள் போலிருக்கிறது' என்று அவளைப் பற்றித் தமக்குள் எடைபோட்டுக் கொண்டார்.

புவனேசுவரியிடம் அவருக்குப் பத்திரிகா தர்மத்தை முன்னிட்டுக் காரியம் ஆக வேண்டியிருந்தது. பெரும் வணிகர்கள், தொழிலதிபர்கள், பிரமுகர்கள் மட்டுமே போதிய முன்னறிவிப்புக்குப் பிறகு, அவள் சம்மதம் பெற்று அவளைச் சந்திக்க முடியுமாம். 'மேம்பட்ட' மனிதர்களின் 'அண்டர் வேல்டு' பிரமுகி அவள், பலமான சிபாரிசில் இந்தப் பேட்டி கிடைத்திருக்கிறது. ஆகவே காந்தியை உடனே மறந்து விட்டு, அந்தக் காந்தத்தால் ஈர்க்கப்பட்டுப் பின்னே போனார்.

முதல் மாடியில் ஓர் 'ஏர் கண்டிஷன்' அறை. பின்புறத்தைச் சிறிதளவு தடுப்பதுபோல் 'ஸ்க்ரீன்' ஒன்று குறுக்கே நின்றது. அதற்கப்பால் இருவருக்கான விசாலமான மெத்தைக் கட்டில். முன்புறம் சோபாவில் அவரை அமர்த்திவிட்டுப் புவனேசுவரி அருகிலிருந்த 'ஃபிரிட்ஜை'த் திறந்தாள். பல வண்ணத் திரவங்கள், நிறைந்த பாட்டில்கள் அங்கே தென்பட்டன.

சோபாவுக்குமுன் கிடந்த மேஜைமேல் வெள்ளித் தட்டுக்களில் வறுத்த முந்திரிப் பருப்பும் உருளைக்கிழங்கு வறுவலும் இருந்தன. கண்ணாடிக் குப்பிகளின் அருகே சோடா வைத்திருந்தது.

''என்ன சாப்பிடுகிறீர்கள்? எது வேண்டுமானாலும் இருக்கிறது.''

''சிப்ஸே போதுமே!'' என்றார் பஞ்சு நடுங்கிக் கொண்டே.

''அதைச் சொல்லவில்லை. விஸ்கி, பிராந்தி, ஜின், ரம் இதில் எது வேண்டுமென்று கேட்டேன்!'' அவள் சிரித்தாள்.

பஞ்சுவுக்கு அடிவயிற்றைக் கலக்கியது. அவர் அங்கே பத்திரிகா தர்மத்தை ஒட்டி வந்தாரே தவிர, அவளுடைய பதிவிரதா தர்மத்தை விலைக்கு வாங்க வரவில்லை. அவள் தவறாக நினைத்துக் கொண்டு விட்டாளோ என்று ஒரு கணம் தடுமாறினார்.

''என்ன வேண்டும். சொல்லுங்கள்?''

''ஏதாவது கொடுங்கள் உங்களுக்குப் பிடித்தது!'' என்றார் சிரிப்பை வருவித்துக் கொண்டு. அவர் குடிப்பதை வழக்கமாகக் கொண்டதில்லை. மேல் நாடுகளுக்குச் சென்ற போதும், சென்னையில் நடைபெறும் மேல் நாட்டார் விருந்துகளிலும் எப்போதாவது குடித்திருக்கிறார்.

நெருப்புத் திரவம் போன்ற ஒன்றில் சோடாவும், பனிக்கட்டியும் கலந்து அவரிடம் நீட்டினாள் புவனேசுவரி. தானும் குடிப்பதுபோல் பாவனை செய்தாள். பஞ்சுவின் முதற் கிண்ணம் காலியானவுடனே அவருக்கு என்னவோ போலிருந்தது. நெற்றிப் புருவத்து நரம்புகளில் பாதரசம் ஓடத் தொடங்கியது. சுய நினைவு உள்ள போதே தாம் வந்த வேலையைச் சொல்லத் துடித்தார்.

''வந்து, நான் வந்து... இதற்காக இங்கே வரவில்லை... பத்திரிகைக்கு... உங்களிடம் கட்டுரை கேட்பதற்காக...'' அவர் தடுமாறினார்.

''ஓ! அப்படியா?'' என்று அவள் அதை மிகச் சாதாரணமாக எடுத்துக் கொண்டவள்போல் குரல் கொடுத்தாள். ஒரு வேளை இப்படியும் இருக்கலாம் என்று அவள் முன்பே ஊகித்திருக்க வேண்டும்.

''அப்படியானால் நாம் மெதுவாகவே பேசலாம். நானும் இப்போதைக்கு வேறு வேலையை வைத்துக் கொள்ளவில்லை. ஓய்வாகத்தான் இருக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு, ''இந்தச் சூழ்நிலையைவிட நாம் மேல் மாடிக்குப் போனால் அதற்கு வசதியாக இருக்கும்'' என்றாள்.

'ஸ்க்ரீ'னுக்கு அப்பால் தெரிந்த சப்ர மஞ்சத்தின் பேரழகைக் கண்டு ஒரு பெருமூச்சு விட்டு மெல்ல எழுந்தார் பஞ்சு; நாற்பது வயதுதான் அவருக்கும். உள்ளே போன திரவமும் எதிரில் இருந்த புவனேசுவரியின் தோற்றமும் அருகில் கிடந்த கட்டிலும் அவரைக் குழப்பத்தான் குழப்பின. சட்டைப் பையில் கூட ஐயாயிரம் இருந்தது. ஆனால் அது கட்டுரை

ஆசிரியையாக அவர் உருவாக்கப் போகும் புவனேசுவரிக்கான முன் பணம். ஐந்து நிமிஷ விவகாரத்துக்காக அதைச் செலவிட அவருக்கு உரிமை இல்லை.

அடுத்த மாடிக்கு அவள் துள்ளல் நடையோடு சென்றபோது, தலை சுற்றலால் கீழே விழுந்துவிடாமல் இருக்கக் கைப்பிடியைப் பற்றிக் கொண்டே மெல்ல மாடிப் படிகளில் ஏறினார் பஞ்சு. 'இவள் எங்கே ஓடிவிடப் போகிறாள்?' என்ற ஒரு தெம்பு. பின்னால் கட்டுரை போட்டதற்காக அவளையே காணிக்கையாகக் கேட்டால் மறுத்துவிடுவாளா என்ன?

புவனேசுவரியின் பின்னழகுத் தோற்றம் அவள் வயதை இன்னும் குறைத்து இருபது வயதுச் சிறு பெண்ணாகக் காட்டியது. இந்தத் தொழிலில் இருந்து கொண்டு எப்படித்தான் இந்த உடலைக் குங்குமச் சிமிழாக வைத்துக் காப்பாற்றுகிறாளோ என்ற பிரமிப்பு அவருக்கு.

மூன்றாவது மாடியும் சின்னஞ்சிறு கந்தர்வ உலகந்தான்; பூந்தொட்டிகளால் சூழப்பெற்ற நாலு கால் மண்டபம். சுற்றிலும் சுருட்டிவிட்ட படுதாக்கள். மத்தியில் பெரிய ஊஞ்சற்பலகை. மண்டபத்துக்கு வெளியே பல்வேறு சிருங்கார ரசத் தோற்றங்களில் கண்ணனும் ராதையும் தழுவி நிற்பது போன்ற சிலைகள்.

வியந்து நின்ற பஞ்சுவைப் பார்த்து, ''ஏது, ஒரே ஆடம்பரமாயிருக்கிறதே என்று நினைக்காதீர்கள்'' என்றாள் புவனேசுவரி; ''பார்க்கப் போனால் ஒன்றுமே இல்லை. பட்டினத்தார் பாடி வைத்து விட்டுப் போயிருப்பது அத்தனையும் சத்தியம். என்ன செய்வது? கொடுப்பதற்குச் சக்தியுள்ள ஆட்கள். நான் கேட்பது நியாயந்தான் என்று நினைக்க வேண்டும் பாருங்கள். அதற்காகத்தான் வரவேற்பறையிலிருந்து இந்த இடம் வரையில் இப்படிக் காசைக் கொட்டியிருக்கிறேன், என் தொழிலுக்கான ஏற்பாடுகள்.''

மூலையில் ஒரு சிறு அறை தெரிந்தது. அதைக் காட்டி, ''வாருங்கள், ஆபீஸ் அறைக்குப் போவோம்'' என்றாள்.

இதற்காக ஆபீஸ் வேறேயா!

தன்னுடைய அலுவல் அறை நாற்காலியில் அவள் உட்கார்ந்து கொண்டாள். மேசையில் தொலைபேசி, பேனா, பென்சில், கடிதங்கள், நோட்டுக்கள், புத்தகங்கள் பரவலாக இருந்தன. அந்த வருடத்து நாட்குறிப்பு ஒன்றும் அவளருகில் தென்பட்டது.

''நீங்கள் புத்தகப் பைத்தியம் போலிருக்கிறதே!'' என்று பேச்சை ஆரம்பித்தார் பஞ்சு.

''பொருளாதாரத்தில் நான் எம்.ஏ. பட்டம் பெற்றவள்.''

''என்ன?''

''ஆமாம். ஆடம் ஸ்மித், கார்ல் மார்க்ஸ், மகாத்மா காந்தி இவர்களுடைய பொருளாதாரத்தை நான் இப்போது கூட ஆராய்ந்து வருகிறேன். பிராய்டின் மனத்தத்துவப் பயிற்சியும் உண்டு. இவற்றுடன் குப்பை கூளங்களையும் கூடப் படிக்கிறேன்.''

''பஞ்சாமிர்தத்தை...?''

''ஓ'' என்று கூறிச் சிரித்தாள் புவனேசுவரி; ''வயதான கிழம் கட்டைகளுக்கெனப் பக்தி மார்க்கம் சில பக்கங்களில், குத்து வெட்டு கொலை என்று இளவட்டங்களுக்கு மர்மச் சரக்கு சில பக்கங்களில், சராசரிகளைத் திருப்திப்படுத்த அரசியலும் சினிமாவும் சில பக்கங்களில் என்று இப்படிக் கொடுத்து வருகிறீர்கள்.''

புவனேசுவரி தாம் நினைத்ததைவிடக் கெட்டிக்காரி என்பதைப் புரிந்து கொண்டார் பஞ்சு. வியாபார தந்திரத்தின் அடிப்படைக்கே அவள் போய் விட்டாள்.

''நாங்கள் ஒரு புதுப்பகுதி தொடங்கலாமென்று பார்க்கிறோம். மேல் நாடுகளுக்கு நான் போனபோது உண்மைக்கதைகளால் பத்திரிகைகள் வளர்ச்சி அடைவதைப் பார்த்தேன். கற்பனைக் கதைகளின் காலம் மாறிவிட்டது.''

''ஓஹோ! அப்படியா?''

''உங்கள் வாழ்க்கையில் நடந்த உண்மைச் சம்பவங்களை நீங்களே எழுதினால் தொடர்ந்து போடலாம் என்று பார்க்கிறோம்...''

''என்ன தலைப்புக் கொடுப்பீர்கள்? 'வழுக்கி விழுந்த ஒரு சகோதரியின் கதை, அவரே ரகசியங்களை வெளியிடுகிறார்' என்று போடுவீர்களா?'' -அவள் சிரித்தாள்.

''புதுமையாக இருக்கும்; புரட்சிகரமாகவும் இருக்கும். போஸ்டர் போட்டு விளம்பரம் செய்தால் ஐந்து லட்சம் பிரதி அதிகமாகப் போகும்.''

அவர் கண்களை அவள் கூர்ந்து நோக்கிக் கொண்டே, ''எனக்குக்கூட டயரி எழுதும் பழக்கம் உண்டு; என்னோடு சம்பந்தப்பட்டவரின் உண்மைக் கதைகளைச் சொன்னால் அது ரசமாகவும் இருக்கும்'' என்றாள்.

''டயரி இருக்கிறதா? தங்கச் சுரங்கமே கிடைத்து விட்ட மாதிரி! வைரப் புதையல் கிடைத்த மாதிரி!''

''ஆனால்...''

''என்ன?''

''வாசகர்கள் விரும்பிப் படிப்பது போல் எனக்கு எழுதத் தெரியாதே!''

''அதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். உங்கள் குறிப்பை வைத்துக் கொண்டு நீங்களே எழுதுவதுபோல் எழுதிவிடச் சொல்கிறோம். உங்கள் பெயரிலேயே எழுதச் சொல்கிறோம்.''

''இப்போது புரிகிறது'' என்றாள் புவனேசுவரி.

''என்ன?''

''கொலைக்காரன், கொள்ளைக்காரன், என்னைப்போல் சீரழிந்தவள் இவர்களெல்லாம் எழுதுவதாக மேல் நாடுகளில் உண்மைக் கதைகள் போடுகிறார்களே...''

''ஆமாம், அப்படியெல்லாம் கூடுவிட்டுக் கூடு பாயும் 'கோஸ்ட்' எழுத்தாளர்கள் இங்கும் உண்டு. உங்கள் உணர்ச்சியை அப்படியே எழுத்தில் கொண்டு வந்துவிடுவார்கள்.''

''இதில் இன்னும் ஒரு சிரமம் இருக்கிறது'' என்றாள் புவனேசுவரி. ''என் தொழில், சட்டப்படி தடுக்கப்பட்ட தொழில்; இதைப்பற்றி வெளிப்படையாகச் சொல்வதென்றால்...''

''எங்க சட்ட ஆலோசகரிடம் கேட்டு வழி கண்டு பிடித்து விடலாம்; அதில் ஒன்றும் சிரமம் இல்லை.''

''விடமாட்டீர்கள் போலிருக்கிறதே?'' என்று நகைத்தாள் புவனேசுவரி.

அதுதான் தக்க சமயமென்று தாம் கொண்டு வந்திருந்த பணத்தை எடுத்து அவள் முன்னே வைத்தார் பஞ்சு.

''இந்த ஐயாயிரத்தை இப்போது அட்வான்ஸாக வைத்துக் கொள்ளுங்கள். மற்றதைப் பிறகு பேசிக் கொள்ளலாம்.''

அப்போது டெலிபோன் மணி அடித்தது. கீழேயிருந்து அவளுடைய செயலாளர் பேசினார். புவனேசுவரி அவரிடம் கூறினாள்: ''யார் அது, அபயம் அநாதை விடுதித் தலைவி மல்லிகா அம்மா பேசினார்களா? விடுதியோட புதுக் கட்டிடத்துக்கு நாளைக்கு ஒரு லட்சம் கட்டணுமா? இதற்காக அவர்களை இங்கே வந்து சிரமப்பட வேண்டாம்னு சொல்லுங்க. நானே இரவு ஒன்பது மணி சுமாருக்குப் பணத்தோட அவர்களைச் சந்திக்கிறேன்னு போன் பண்ணிடுங்க.

பஞ்சுவுக்கு ஒரே திகைப்பாக இருந்தது. அபயம் அநாதை விடுதி வாழ்விழந்த, புறக்கணிக்கப்பட்ட, வழுக்கி விழுந்த, வஞ்சிக்கப்பட்ட இளம் பெண்களின் புகலிடம். மல்லிகா அம்மா அவர்கள் தெய்வம். ஒரு முறை அந்த அம்மாளிடம் இந்த விடுதி நடத்தப் பெருஞ் செலவாகுமே, எப்படி நடத்துகிறீர்கள்?' என்று பஞ்சுவே கேட்டிருக்கிறார். ''அதை மட்டும் கேட்காதீர்கள்? எங்கள் விடுதிப் பெண்களுக்குக் கூட அது தெரியாது; தெரியக் கூடாதென்பது உதவுகிறவர்களின் வேண்டுகோள் என்று பதிலளித்திருக்கிறார். ஐயாயிரம் நன்கொடை கொடுத்துவிட்டு, அதை எல்லாப் பத்திரிகைக்காரர்களுக்கும் சொல்லி கொட்டை எழுத்தில் போடச் செய்து, அதனால் ஐம்பதனாயிரம் விளம்பர லாபம் தேடிக்கொள்ளும் இந்த நாட்டில் இப்படியும் ஒருத்தியா!

''வெளியில் தெரியாமல் இவ்வளவு பெரிய நன்கொடையா?''

''வெளியில் தெரியக்கூடிய முறையிலா எனக்கு இந்தப் பணம் வருகிறது?'' என்று கேட்டுவிட்டு, ''சம்பாதிப்பதை மட்டும் இருட்டில் ஒளித்துவிட்டு, கொடுப்பதற்கு மட்டும் பிரமாதமாக வெளிச்சம் போட்டுக் காட்டுவது கேவலமானதல்லவா?'' என்றாள்.

''அதற்காகவா இப்படி....?''

''இல்லை. விளம்பரத்தோடு செய்யும் உதவி ஊர் உலகத்தை ஏமாற்றுவதற்குச் செய்யும் உதவியாகும். இதை நான் என்னை நானே ஏமாற்றி கொள்ளச் செய்கிறேன்''

''என்ன?''

''நூற்றுக்கு ஐம்பது பேர் குடிசைகளிலும் பிளாட்பாரங்களிலும், புழுக்களிலும் கேவலமாக நெளியும் இதே நகரத்தில், நான் லட்சத்துக்கு மேல் சம்பாதிக்கிறேன் என்றால் நான் திருடி. பகல் கொள்ளைக்காரியை விடக் கேவலமானவள். அவர்கள் வயிற்றுக்கும் துணிக்கும் போக வேண்டியதை நான் ஏமாற்றித் திருடுகிறேன். இது விபசாரி புவனேசுவரியின் வாக்கல்ல. நீங்கள் எந்த காந்தியைப்பற்றி எழுதி ஏமாற்றுகிறீர்களோ, அந்தக் காந்தியின் வாக்கு. உழவரை விட, நெசவாளரைவிட, தொழிலாளரைவிட, விஞ்ஞானியை விட, கவிஞரைவிட, எழுத்தாளரைவிட, நான் செய்யும் தொழில் மிகவும் உயர்ந்த தொழில், பாருங்கள்! நான் இதையே குடிசைத் தொழிலாக்கிக் குச்சுக்காரியாகியிருந்தால், இந்த வேளையில் பிளாட்பாரத்தில் தொழு நோயாளியாக என்னைத் தூக்கி எறிந்திருப்பார்கள். சம்பாதிப்பதில் நான் காந்தியப் பொருளாதாரத்தைக் கடைப்பிடிக்கவில்லை. ஆடம் ஸ்மித் இதற்கு என் ஆசான். குச்சிக்காரியாகாமல் மச்சுக்காரியானேன். குடிசைத் தொழிலாக்காமல் இதையே, 'இண்டஸ்ட்ரி' ஆக்கினேன். 'இண்டஸ்டரி' என்ற பெயரில் நீங்கள் குப்பை மேட்டையெல்லாம் கோபுரத்தை விட உயர்ந்தது என்று சாதிக்கிறீர்களே அதே போல், அருவருக்கத்தக்க ஒரு சாக்கடைக் குழியைத் தங்கப்புதையல் என்றும் வைரச் சுரங்கம் என்றும் போஸ்டர் போடாமலே விளம்பரப்படுத்தினேன். முட்டாள்கள் வந்து மொய்த்தார்கள். மொய்க்கிறார்கள். காந்தி பக்தராகிய நீங்களே என் புனிதமான சேவையை உங்களுக்கு விளம்பரப்படுத்த வந்திருக்கிறீர்கள். நூற்றுக்கணக்கில் இங்கேயே குச்சுக்காரிகள் இருக்க ஏன் இந்த மச்சுக்காரியை மட்டும் நாடுகிறீர்கள்? ஓர் இண்டஸ்டரி மற்றோர் இண்டஸ்ட்ரியின் துணையைத் தேடி வந்திருக்கிறது; இதுதானே இரகசியம்?''

திடீரென ஓர் எரிமலை வெடித்தது போல் வெடித்து விட்டாள் புவனேசுவரி. கண்கள் சிவந்து கண்ணீர் பொல பொலவென உதிர்ந்தது. பழக்கம் இல்லாத ஒரு மனிதர் முன்னே அவள் நிலை குலைந்து போய்

அழுதது பற்றிக் கவலைப்படவில்லை. வாயடைத்துப் போய் மூச்சுக் காற்று இழைவது தெரியாமல், சிலைபோல் மாறிப்போனார் பஞ்சு.

''அநாதை விடுதிக்குக் கொடுத்து என் மனச் சாட்சியை ஏமாற்ற வழி காட்டியவர் யார் தெரியுமா? காந்தி! தவறான வழியில் பொருள் சேர்ப்பது பாவம்; அதைத் தனக்கே பயன்படுத்திக் கொள்வது இரண்டாவது பாவம். மோசமான வழியில் சம்பாதித்தாலும் அதை நல்ல காரியத்துக்குச் செலவு செய்தால் இரண்டாவது பாவ மூட்டையாவது கரைக்கலாம். இந்தக் காந்தீயப் பொருளாதாரத் தத்துவந்தான் என்னை ஏமாற்றிக் கொள்ள இப்போது உதவுகிறது.''

பஞ்சுவுக்கு என்ன செய்வதென்றே முதலில் தெரியவில்லை. அவள் விலைமகளாகத் தொழில் செய்தாலும், அவளிடம் கேவலம் தசைக்கும் எலும்புக்கும் ரத்தத்துக்கும் புண்களுக்கும் அப்பாற்பட்ட ஏதோ ஒன்று இருப்பது போல் அவருக்குத் தோன்றியது. லட்சத்தைத் துச்சமாக மதிப்பவளுக்கு முன்னால் ஐயாயிரத்தை வைத்ததும், அதையும் வாசகர்களாகிய மனிதர்களிடம் பதுங்கி அவர்களுக்கே தெரியாமல் மறைந்திருக்கும் விலங்குணர்ச்சிக்கு அவன் ஆன்மாவை இரையாக்க முன்பணமாக்கியிருப்பதும் அவருக்கு என்னவோ போலிருந்தன.

மற்றவர் மனத்தை ஊடுருவும் 'டெலிபதி' அவளிடம் இருந்ததா? அவளும் அந்த ஐயாயிரத்தைப் பற்றியே பேசினாள்.

''இந்த ஐயாயிரம் என்ற தொகைதான் என் வாழ்க்கையில் திருப்பு முனையானது. அதனால்தான் ஒரு மணிக்கு ஐயாயிரம் என்று நான் எனக்கே விலை மதிப்பு வைத்துக் கொண்டேன். அதையே நீங்களும் என் ஆன்மாவுக்கு அட்வான்ஸாக.....

'அப்படியெல்லாம் இல்லை' என்று குறுக்கிட்டார் பஞ்சு. பிறகு அந்த ஐயாயிரத்துக்குள் இருக்கும் அவள் கதையைக் கேட்கும் ஆவல் அவரை உந்தித் தள்ளியது.

எங்கோ பார்வையை அலைய விட்டவளாகத் தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவள் கூறலானாள்-

''பதினைந்து வருஷம் இருக்கும். எம்.ஏ.பட்டமும் வாங்கி விட்டேன். அந்த வயதில் நான் எப்படி இருந்திருப்பேன் என்று நினைத்துப் பாருங்கள். படிப்பு, வயது, அழகு, குணம் இதற்காகவெல்லாமே என் தூரத்து உறவினர் ஒருவர் என்னைக் காதலித்தார் என்று நம்பினேன். கல்யாணப் பேச்சு வந்த போது ஐயாயிரம் ரூபாய்க்காக அவர் புற முதுகு காட்டிவிட்டார். ஓய்வுபெற்ற பள்ளி ஆசிரியரான என் அப்பாவினால் அதைக் கொடுக்க முடியாதென்று அவருக்குத் தெரியும். நான் வேலைக்குப் போய்ச் சம்பாதித்தால் அந்தப் பணத்தை என் கணவரிடமே தருவேன் என்றும் அவருக்குத் தெரியும். ஆனாலும் அவர் அப்பாவைச் சமாதானப்படுத்த

அந்தத் தொகை எப்படியாவது வேண்டும் என்றார். அன்றைக்குத் திரும்பியது என் குணம். ஐந்து ரூபாயில் தொடங்கிய என் குடிசைத் தொழிலை, ஐயாயிரத்து இன்டஸ்ட்ரி ஆக்கிவிட்டேன். எவர் காலடியில் நான் விழுந்து என் காலமெல்லாம் அடிமையாக ஆசைப்பட்டேனோ, அவரே பிறகு ஒரு நாள் என் நிலை தெரிந்தே என்னிடம் ஐயாயிரத்தோடு வந்தார்; ஒரு மணி நேரத்துக்காகக் கெஞ்சினார். காறித் துப்பி வெளியே அனுப்பினேன்.''

''இதையெல்லாம் நீங்கள் எழுதலாமே?'' என்றார் உற்சாகத்தோடு பஞ்சு.

''எழுதத்தான் ஆசை; 'கோஸ்ட்' எழுத்தாளரைக் குறுக்கே கூலி கொடுத்து எழுதச் சொல்லாமல், என்... என் கையாலேயே எழுத ஆசை...''

'பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போல்' என்று நினைத்துக் கொண்ட பஞ்சு; ''எழுதுங்கள், எழுதுங்கள்; ஒன்று விடாமல் எழுதுங்கள். வரதட்சிணைக் கொடுமை, சமூகச் சீர்திருத்தம், பொருளாதாரச் சமத்துவம் எல்லாம் உங்கள் கதையில் வரும்போலிருக்கிறதே!'' என்று அவளுக்கு ஊக்கமூட்டினார்.

கலீரென்று சிரித்தாள் புவனேசுவரி.

''என்ன சிரிக்கிறீர்கள்?''

''ஏதோ என் கதையில் 'மாரல்' இருக்குமென்று நீங்கள் எதிர்பார்த்து வந்தது போலவும் 'மாரலை'ப் பரப்ப நீங்கள் மிகவும் அக்கறைப்படுவது போலவும் அல்லவோ பேசுகிறீர்கள்? 'இம்மாரல்' தொழிலால் நான் எப்படிச் சுலபமாகப் பணம் சேர்த்துவிட்டேன் என்பதைச் சொல்லி, படிக்கும் ஆண்-பெண்களுக்கு உங்கள் பத்திரிகையை நான் வழுக்குப் பாறையாகச் செய்துவிட்டால் நீங்கள் என்ன செய்வீர்களாம்?''

''அப்படியெல்லாம் நீங்கள் செய்ய மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும்'' என்று மழுப்பினார் பஞ்சு.

''சரி, தொழில் பேச்சுக்கு வருவோம். நீங்கள் உண்மைக் கதையைக் கேட்டு வந்திருக்கிறீர்கள். நான் ஒளிவு மறைவின்றி உண்மையை எழுதத் தயாராக இருக்கிறேன். உண்மையை எழுதுவதாக நான் எந்தக் கோயிலில் வேண்டுமானாலும் சத்தியம் செய்யத் தயார். அந்தச் சத்தியத்தை உங்கள் 'பஞ்சாமிர்தம்' தாங்கும்?''

''என்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள்?''

''இந்தாருங்கள்! நீங்கள் 'அட்வான்ஸ்' பணம் கொடுத்ததுபோல், நானும் கொஞ்சம் உங்களுக்கு, 'ஸாம்பிள்' தருகிறேன். இந்த டயரியைப் புரட்டிப் பத்து நிமிஷம் படித்துப் பாருங்கள்.''

தன் நாட்குறிப்பை எடுத்துப் பஞ்சுவிடம் நீட்டினாள் புவனேசுவரி. தங்கச் சுரங்கம் என்றும் புதையல் என்றும் வைர வயல் என்றும் பஞ்சு மதித்த அந்தக் குறிப்பு நோட்டைப் புரட்டி, மெல்ல மெல்ல அதில் ஆழ்ந்தார் பஞ்சு.

நெற்றியில் வேர்வைத் துளிகள் அரும்பின.

அவருக்கு மூச்சு முட்டியது.

நெஞ்சு வலித்தது.

கைகள் உதறல் எடுக்கத் தொடங்கின.

வெறும் சொற்களுக்கு இவ்வளவு வேகம், உணர்ச்சி, குமுறல் எல்லாம் இருக்க முடியுமா? உண்மையென்றால் அப்பட்டமான உண்மை. ஆடைகளையப்பட்ட உண்மை. வெறுக்கத்தக்க, விபரீதமான, அருவருப்பூட்டும், அசிங்கமான, பேடித்தனம் நிறைந்த, மிருகப் பிரயாத்து உண்மை.

அதில் சம்பந்தப்பட்டிருந்த மிக முக்கியமான சிலரோ?...

பஞ்சுவால் தர்ம தாதாக்கள் என்றும், கொடை வள்ளல்கள் என்றும், தொழிலில் அசகாய சூரர்கள் என்றும், சமுதாயத்தின் தூண்கள் என்றும், நாட்டுக்கு வழிகாட்டிகள் என்றும் வர்ணிக்கப்பட்டவர்கள் - இவர்கள் எல்லாரும் எப்படி அற்பத்தனமாகவும் ஆண்மையற்ற முறையிலும் இவளிடம் நடந்து கொண்டிருக்கிறார்கள்?

இடையில் அவளை ஏறிட்டுப் பார்த்தார் பஞ்சு. ''மனிதர்களின் சொந்த விஷயம் எவ்வளவோ இருக்கும். அதைக் குறை கூற நமக்கு அருகதை இல்லை என்று நீங்கள் இவர்களுக்குப் பரிந்து கொண்டு வரலாம். ஆனால் இந்தச் சொந்த விஷயம் சமுதாயத்தைப் பாதிக்கும் விஷயமானதால்தான் நான் எழுதியிருக்கிறேன். என் ஒருத்திக்குச் செலவு செய்யவே இவர்களிடம் இவ்வளவு பணம் இருக்குமானால்! உள்ளூரில் பிரமுகர் வேடம் கலைந்துவிடும் என்பதற்காக என்னை விமானத்தில் டில்லிக்கும் பம்பாய்க்கும் அழைத்துச் செல்ல இவர்களால் முடிகிறதென்றால்? அந்த அந்த ஊர்களில் எனக்குக் காரும், ஆடம்பரமான ஓட்டலும், ஏவலாளர்களும் இவர்களால் ஏற்பாடு செய்ய முடிகிறதென்றால்? - ஏமாளிகளின் வாயிலும் வயிற்றிலும் ஆன்மாவிலும் அடித்துப் பறித்த பணமல்லவோ இது!....''

''மிஸ் புவனேசுவரி!'' என்று குறுக்கிட்டார் பஞ்சு.

''மிஸ் என்று சொல்லாதீர்கள். மிகப் பெரிய மனிதர்கள் சிலருக்கு நான் மிஸஸ். இதில் பொதுவுடைமையை அவர்கள் ஒப்புக் கொள்ளுகிறார்கள்.''

''உண்மைப் பெயர்களை மறைத்துவிட்டு உண்மைக் கதையா? பத்திரிகா தர்மப்படி உண்மையை மறைப்பது தான் உண்மை என்று எனக்குத் தெரியாது.''

பஞ்சுவுக்கு ஐயாயிரம் பறிபோனாலும், புவனேசுவரியிடமிருந்து எப்படியாவது நழுவிக் கொண்டால் போதும் என்று இருந்தது. அவர் தம் பத்திரிகையின் வாயிலாக லட்சோப லட்சம் வாசகளிடம் யார் யாரைப் பெரிய மனிதர்கள் என்று தூக்கிப்பிடித்துப் படம் காட்டியிருந்தாரோ, அவர்களெல்லாரும் எவ்வளவு சுயநலவாதிகள், வசதிக்கு அடிமையான மிருகங்கள் என்பதை அவள் தக்கச் சான்றுகளாடு நிரூபித்துக் காட்டியிருந்தாள். 'பஞ்சாமிர்த'த்தில் இதையெல்லாம் போடப் பஞ்சுவுக்குப் பைத்தியமா என்ன?

''அதிபரிடம் கலந்த பிறகு மறுபடியும் உங்களை வந்து பார்க்கிறேன்'' என்று நாற்காலியிலிருந்து எழுந்தார் பஞ்சு.

''மறுபடியும் நீங்கள் வரமாட்டீர்கள் என்பது தெரியும். வரவும் வேண்டாம்'' என்றாள் புவனேசுவரி. அத்தோடு அவள் நிறுத்தவில்லை. ''கோடி கோடியாகச் சம்பாதித்தும் குடும்பம் கலைகிறதென்றும், பிள்ளை குட்டிகள் வீட்டை விட்டு ஓடுகிறார்கள் என்றும், யாரையும் நம்ப முடியவில்லை என்றும் மன நிம்மதியில்லாமல் அவதிப்படுகிறார்கள் மேல் நாட்டுக்காரர்கள். அவர்களில் சிலர் புத்தரும் கீதையும் வள்ளுவரும் காந்தியும் பிறந்த இந்த மண்ணுக்கு அமைதி தேடி வருகிறார்கள். சிறிதளவாவது இந்த மண்ணில் மன நிம்மதி பெற முடியாதா என்று ஏக்கம் அவர்களுக்கு. ஆனால் நீங்களோ, பணமென்னும் மாயமான் வேட்டைக்காக அவர்களைப் பார்த்துக் கொலை, கொள்ளை, சோரம் போன்றவற்றை இங்கே எழுத வேண்டும் என்கிறீர்கள். அறிவாளிகள் செய்கிற தொழிலை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.''

பஞ்சுவுக்கு இது சுருக்கென்று தைத்தது. கேவலம் உடலை விற்றுப் பிழைப்பவள், அறிவாளிகளைக் குறை சொல்வதா?

''உங்களுக்கு எழுத விருப்பமில்லை என்றால் விட்டு விடுங்கள்'' என்றார் அவர் வெடுக்கென்று.

''பொய்யை எழுதி, அந்தப் பொய்யை உங்கள் அச்சுயந்திரத்தினால் பரப்ப விரும்பவில்லை என்று தான் சொல்கின்றேன். உண்மையை மறைக்காமல் எழுதி அதை அச்சுப் போட்டு விட்டுத்தான் நான் சாகப் போகிறேன்; அல்லது சாவதற்குத் திட்டமிட்டவுடன் அதை நான் வெளியிடுவேன்.''

''அப்படியே செய்யுங்கள். நான் வருகிறேன்!'' என்று கோபமாக எழுந்தார் பஞ்சு.

''இதை மட்டும் கேட்டு விட்டுப் போங்கள். நான் உடம்பால் கெட்டவள்; உடம்பால் கெடுப்பவள். உடம்பு என்ற யந்திரத்தினால் நூறு பேரையோ இருநூறு பேரையோ தான் கெடுக்க முடியும். அறிவு பணத்துக்கு அடிமையாகி, யந்திரத்தின் துணை கொண்டு, மனித ஆன்மாவைக் கெடுப்பதென்றால் கோடிக்கணக்கான ஆன்மாக்களைக் குறைந்த நேரத்தில் கெடுக்க முடியும். யந்திரத்தால் மனிதனை மிருகமாக்கினீர்களோ பிறகு அவன் உங்கள் மேல் தான் பாய்வான். ஐயா, காந்தி பக்தரே! பேசப்பயந்தவனுக்குப் பேசத் துணிவையும், எழுதப் பயந்தவனுக்கு எழுதத் துணிவையும் தந்தவர் காந்தி. அவர் தந்த சுதந்திரத்தை, குடி ஆட்சியைக் கேவலம் காசுக்காகக் கறைப்படுத்தாதீர்கள். உங்கள் பேனா ஒழுங்காக எழுதினால்தான் காந்தி உங்களைக் காப்பாற்றுவார். இல்லாவிட்டால் துப்பாக்கியைப் பேனா வாக்கி ரத்த மையால் எழுதத் துணிந்தவன் உங்கள் இடத்துக்கு வந்துவிடுவான். யந்திர அரக்கனை வைத்துப் பிழைப்பு நடத்துகிறவர்கள், மனச்சாட்சியை விட அந்த அரக்கன் பெரியவன் என்று நம்பி ஏமாந்து விடாதீர்கள்-போய் வாருங்கள்!''

வேர்க்க விறுவிறுக்க மாடிப்படிகளில் இறங்கி வேகமாக ஓடி வந்தார் பஞ்சு. அவள் படிப்பறையை அடுத்த படிகளில் அவர் காலடி வைத்தபோது அவர் பார்வை அவரையுமறியாமல் படத்திலிருந்த காந்தியின் பக்கம் திரும்பியது. அந்தக் கிழவரின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கக் கூடிய மெய்த் துணிவு அவரிடம் இல்லை; நடுங்கினார். புவனேசுவரி என்னும் ஒரு விலைமகளின் நெஞ்சுக்குள்ளே கூடக் குடியிருந்து, எரிமலையாக வெடித்து, சத்தியத்தின் நெருப்புத் துண்டுகளை அவரால் வீச முடியுமானால், அவர் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியானார் என்பதெல்லாம் வெறும் பொய்தானா? கிழவர் இன்னும் செத்துத் தொலைக்கவில்லையே என்ற எரிச்சல் பஞ்சுவுக்கு.